சுருக்கம்

நெடுஞ்சாலைத்துறை – மதுரை மாநகர், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரையிலான உள்வட்டச் சாலையை, "மதுரை–பாண்டிகோவில்–கப்பலூர் சாலை கி.மீ. 0/0–2/0 மற்றும் கி.மீ. 2/7–27/2 (மா.நெ.235)" மாநில நெடுஞ்சாலை என அறிவித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (இஎபி–2(1)) துறை

அரசாணை (நிலை) எண்.130 நாள்:15.10.2020

சார்வரி, புரட்டாசி 29, திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கவும்:-

1. அரசாணை (நிலை) எண்.132, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி–3) துறை, நாள் 23.05.1997.
2. அரசாணை (நிலை) எண்.146, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.எஸ்–1) துறை, நாள் 08.12.2014.
3. அரசாணை (நிலை) எண்.74, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.எஸ்–1) துறை, நாள் 14.07.2015.
4. தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கடித எண்.4206/சாலை–1/2015, நாள் 17.06.2016 மற்றும் 09.05.2019.

******

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மாநகருக்கு உள்வட்டச்சாலை அமைக்கும் பணிக்கு, உலக வங்கி கடனுதவியுடன் ரூ.36.35 கோடிக்கு செயல்படுத்திட மதுரை மாநகராட்சிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்கண்ட உள்வட்டச்சாலை அமைப்பதற்கு நெடுஞ்சாலைத் துறையால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மாநகராட்சிக்கு கிரையம் இல்லாமல் இலவசமாக உரிமை மாற்றம் செய்துதரவேண்டும். மேலும், நெடுஞ்சாலைத் துறை மேற்கண்ட சாலை அமைப்பதற்கு விதிக்கக்கூடிய சென்டேஜ் (Centage) கட்டணத்திற்கு விலக்களிக்கும் வகையிலும், மேற்கண்ட சாலை அமைக்கப்பட்டப் பின்னர் மதுரை மாநகராட்சி, மேற்கண்ட சாலையில் சுங்கம் வசூலித்து உலக வங்கியின் கடனை திரும்ப செலுத்த வேண்டுமெனவும் அவ்வரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 25.07.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110–ன்கீழ் மதுரை மாநகரில், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரையுள்ள 27.20 கி.மீ. நீளமுள்ள இருவழித்தடமாக உள்ள உள்வட்டச்சாலையினை ரூ.200 கோடி மதிப்பில் நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படுமென அறிவித்ததன் அடிப்படையில், ரூ.200.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.ப.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட உள்வட்டச்சாலைப் பணியை கட்டுதல், இயக்குதல் (ம) பராமரித்தல் அடிப்படையில் தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிறுவனம் மூலம் செயல்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் மதுரை மாநகரில், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரை 27.20 கி.மீ. நீள இருவழித்தடமாக உள்ள உள்வட்டச்சாலையை, மதுரை நெடுஞ்சாலைத்துறை (திட்டங்கள், கோட்டம் எண்.2)–ன் மூலமாக முழு வடிவில் அமைக்கப்பட்டு மதுரை மாநகராட்சிக்கு கடந்த 25.03.2002–ல் ஒப்படைக்கப்பட்டது என்றும், அதன் பின்னர், மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி மேற்கண்ட உள்வட்டச்சாலைக்கு ஐந்து இடங்களில் சுங்கவரி வசூல் மையங்கள் அமைக்கப்பட்டு மதுரை மாநகராட்சியால் சுங்கம் வசூலிக்கப்பட்டு சாலை பராமரிக்கப்பட்டுவந்தது என்றும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் விருதுநகர் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் அமைப்பினால் தொடரப்பட்ட நீதிப் பேராணை வழக்கு எண்.6216/2011 மற்றும் 6217/2011, நாள் 31.10.2014–ல் வழங்கப்பட்ட தீர்ப்பில், கடன் தொகை திருப்பி செலுத்துவதற்குரிய சுங்கவரி வசூலிக்கப்பட்டிருப்பின் தொடர்ந்து சுங்கவரி வசூல் செய்வதை மதுரை மாநகராட்சி நிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும், அதனடிப்படையில் கடந்த 22.01.2015 முதல் சுங்கவரி வசூல் செய்யும் பணி நிறுத்தி வைக்கப்பட்டதென்றும், தற்போது வரை சுங்கச் சாவடிகள் அகற்றப்படாததால், மின் இணைப்புக் கட்டணம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு இச்சுங்கச் சாவடிகள் மாநகராட்சி மூலமாகவே பராமரிக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், தற்பொழுது மதுரை சுற்றுச் சாலையை நான்கு வழிச்சாலையாக கட்டுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் சுங்கம் – (BOT Toll) முறையில், அமைக்க திருவாளர்கள் பாலாஜி டோல்வேஸ் (மதுரை) பிரைவேட் லிமிடேட் அவர்களுடன் தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஒப்பந்த உடன்படிக்கை (Concession Agreement) இருபது வருடகாலத்திற்கு (இரண்டு வருட கட்டுமான காலத்தையும் சேர்த்து) 29.02.2016–ல் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு, 22.11.2019 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு, சுங்கக்கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது என்றும், மேலும் இச்சாலையை ஒப்பந்ததாரர் மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி (Construction Agreement) 18 ஆண்டுகளுக்கு பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அரசுக்கு பராமரிப்பு மற்றும் மேம்படுத்தலுக்கான செலவினம் ஏதுமில்லை என்றும், மேற்கண்ட மதுரை மாநகராட்சி சாலையானது தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிறுவனத்தால் நான்கு வழிச்சாலையாக மாநில நெடுஞ்சாலைத் தரத்திற்கேற்ப அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டு வருவதால் மாநில நெடுஞ்சாலையாக நெடுஞ்சாலைத்துறை பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ள அரசின் ஆணைகள் அவசியமானதாகிறது எனவும் தெரித்துள்ளார். எனவே, மதுரை மாநகரில், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரையிலான உள்வட்டச் சாலையை, "மதுரை–பாண்டிகோவில்–கப்பலூர் சாலை கி.மீ. 0/0–2/0 மற்றும் கி.மீ. 2/7–27/2 (மா.நெ.235)" என்ற பெயரில் மாநில நெடுஞ்சாலையாக பெயரிடப்பட்டு ஆணைகள் வழங்குமாறு தலைமைப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

6. தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று மதுரை மாநகரில், மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை முதல் கப்பலூர் வரையிலான உள்வட்டச் சாலையை, "மதுரை–பாண்டிகோவில்–கப்பலூர் சாலை கி.மீ. 0/0–2/0 மற்றும் கி.மீ. 2/7–27/2 (மா.நெ.235)" மாநில நெடுஞ்சாலை என அறிவித்து அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அலுவல் சாரா எண்.04/து.செ.(எம்.ஏ)/பொ.ப–1/2020, நாள்:21.09.2020–ன்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–25.
மாவட்ட ஆட்சியர், மதுரை.
செயல் இயக்குநர், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை–2.
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை–18.
மாநில கணக்காய்வு தலைவர், மதுரை.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கூடுதல் சிறப்பு தனிச் செயலர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை –9.
அரசு துணைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை –9.
நிதித் (பொ.ப–1) துறை , சென்னை–9.

கோ.எண்.9230/இஎபி–2(1)/2016
இருப்பு கோப்பு /உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பபடுகிறது//**

பிரிவு அலுவலர்

15/10